## <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

## <u>அ.வ.எண்.313/2006</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. K. அம்பிகா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி 1 வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2020 ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 28.01.2020**

**பெயர் - சுஜாதா**

**க/பெ - சிவக்குமார்**

**வயது -**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம் -12.14pm**

**<u>குறுக்கு விசாரணை -</u>**

நான் அனுப்பம்பட்டு கிராமத்தில் 2005ல் இருந்து குடியிருந்து வருகிறேன். எனக்கு 2001ல் திருமணம் நடைபெற்றது. என் திருமணத்திற்கு பின் அண்ணாநகரில் 1 1/2 ஆண்டுகள் குடியிருந்தும் அதன் பின் திருவெற்றியூரிலும் குடியிருந்து வருகிறேன். திருவெற்றியூரில் 2 ஆண்டுகள் 2003 முதல் 2005 வரை குடியிருந்தேன். வழக்கு தாக்கல் செய்தது என் அம்மா. என் தாயார் 2011ல் இறந்தார். என்ன பரிகாரம் வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டது. என் தந்தை 2019ல் இறந்தார். பிரதிவாதிகளுடன் சமரசம் பேசவில்லை. என் தாயாரும் சமரசம் பேசவில்லை. வழக்கு சொத்து என் தாயாருக்கு அவரது மாமியார் 1979ல் எழுதிவைத்தார்.

**விசாரணை முடியும் நேரம் -12.21pm**